# மெட்ரோ ரயில் நிலையங்களில் பயணிகளுக்கான தொலைபேசி வசதி

**சென்னை, மார்ச் 9:** மெட்ரோ ரயில் நிலையங்களில் பயணிகளுக்கு இலவச தொலைபேசி வசதியை (தரை வழி) மெட்ரோ ரயில் நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது.

சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம், ஏஜி டி.எம்.எஸ். - வண்ணாரப்பேட்டை இடையே உள்ள நிலையங்களில் செல்லிடப்பேசி சிக்னல் கிடைக்கவில்லை என்று பயணிகள் புகார் தெரிவித்தனர்.

இதையடுத்து, பயணிகளின் அவசரகால உதவிக்காக சென்னையில் 19 சுரங்க மெட்ரோ ரயில் நிலையங்களில் இலவச தரைவழி தொலைபேசி வசதியை மெட்ரோ ரயில் நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது.

மெட்ரோ பயணிகள் இந்த வசதியை எளிதாக பெற முடியும். இந்த சேவை எல்லோருக்கும் கிடைக்கும்.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரி ஒருவர் கூறியது: அவசரகாலத்தில் பயணிகள் தொடர்பு கொள்ள வசதியாக ரயில் நிலையத்தில் ஒவ்வொரு நடைமேடையிலும் இரண்டு தொலைபேசிகள் வைக்கப்பட்டுள்ளன. இந்த வசதி பயணிகளுக்கு உதவியாக இருக்கும்.

திருமங்கலம் -எழும்பூர் மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு இடையே சுரங்கப்பாதையிலும், சைதாப்பேட்டை-ஏஜி டி.எம்.எஸ். இடையேயும் ஜியோ மற்றும் ஏர்டெல் நிறுவனங்களில் சேவைகள் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் வோடபோன் சேவை ஒரு மாதத்தில் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ நிலையம், வண்ணாரப்பேட்டை- ஏஜி டி.எம்.எஸ். இடையே 3 மாதத்தில் செல்லிடப்பேசி சேவை கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.



சென்னை மெட்ரோ 19-ஆவது சுரங்க ரயில் நிலையத்தில் செயல்பாட்டுக்கு வந்துள்ள இலவச தொலைபேசி வசதி.